**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2025ம் ஆண்டு ஜுன் திங்கள் 21ம் நாள் சனிக்கிழமை**

**I.A.No.02/2024**
**in**
**O.S.No.29/2021**

1. பூமயில் (இறப்பு)
2. லலிதா
3. செந்தில்மாரியப்பன்
4. மாடசாமி
5. கோடீஸ்வரன் ...மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள்

/எதிர்/

1. பேச்சியம்மாள்
2. சார்பதிவாளர் அவர்கள்

   சார்பதிவாளர் அலுவலர்,

   சாயல்குடி. .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
3. தமிழக அரசு அதன் மாவட்ட

   பிரதிநிதிகளில் ஒருவரான

   இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர்.
4. கண்ணன்
5. செந்தில்குமார்
6. ராமமூர்த்தி
7. பஜூரூல் ரகுமான்
8. மாரிமுத்து

இந்த இடைநிலை மனு என் முன்பாக 13.06.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.J உதுமான் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ஜெகன் அவர்கள் ஆஜராகியும், 2, 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகியும், 4 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சௌந்தரராபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>**உத்தரவு**</u>

மனுதாரர்கள்/வாதிகளின் வாரிசுகள் தரப்பில் வழக்கில் இறந்துபோன பூமயில் என்பவரின் மகனான லேட்.முத்துவேலின் வாரிசுகளை பூமயில் என்பவரின் வாரிசாக அங்கீகரித்து உத்தரவிடக்கோரி கட்டளை 22 விதி 3ன் சி.பி.சி.-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>**மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**</u>

மனுதாரர் மனுவின் 3ம் மனுதாரர் என்றும், பூமயில் என்பவர் மனுதாரரின் தந்தையின் தாயார் என்றும், வழக்கில் கண்ட புகார்தாரர் கடந்த 09.07.2024ம் தேதி இறந்துவிட்டதாகவும், புகார்தாரரின் கணவரும், மனுதாரரின் தாத்தாவுமான வேலுச்சாமி கடந்த 19.04.2024ம் தேதி இறந்து விட்டார் என்றும், இறந்துபோன பூமயிலுக்கு மனுதாரரின் தந்தை முத்துவேல் மற்றும் 1ம் பிரதிவாதி மட்டும் மக்கள் என்றும், மனுதாரரின் தந்தை முத்துவேல் கடந்த 03.07.2023ம் தேதி இறந்து விட்டார் என்றும்,

மனுதாரரின் தந்தையாருக்கு தன் தாயார் லலிதா மற்றும் மனுதாரரின் சகோதரர்கள் மட்டுமே வாரிசுகள் என்றும், மனுதாரர்களின் பாட்டி 1ம் பிரதிவாதி மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தங்கள் பாட்டியின் வாரிசுகளாக இருந்து மேற்படி வழக்கை நடத்த உள்ளதால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.</u>

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அபிடவிட்டில் கண்டுள்ள விபரங்கள் ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், இறந்துபோன பூமயிலுக்கு முத்துவேல் என்ற மகனும், 1ம் பிரதிவாதி பேச்சியம்மாளும் வாரிசுகள் என்றும், முத்துவேல் இறந்துவிட்டதால் 2 முதல் 5 மனுதாரர்கள் வாரிசுகள் என்றும், அசல் வழக்கில் பரிகாரங்களாக தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று உரிமை விளம்புகை செய்தும், உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் 10.10.2017ம் தேதியட்ட செட்டில்மெண்ட் ஆவண எண்.938/17 Null and Void என விளம்புகை செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கின் 2 முதல் 5 மனுதாரர்கள் பூமயிலின் வாரிசாக நடத்துவதற்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும், இந்திய சாட்சிய சட்டப்படி அவருக்கு தெரியாத விசயத்தை பொறுத்தும் அவர் அறிவிற்கு எட்டாத, வராத சங்கதிகளை பொறுத்தும் வாரிசுகளாக அங்கீகரிக்க வேண்டும் என்று கோரும் நபர்கள் வழக்கினை நடத்த அனுமதி கோருவது ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், பிரிவு 106 Indian Evidence Act ன் படி ஒருவருடைய அறிவிற்கு மட்டுமே சிறப்பாக தெரிந்து கொள்ள

சங்கதியை நிரூபிக்கும் பொறுப்பானது எந்த சங்கதியேனும் ஒருவரின் அறிவிற்கு மட்டுமே எட்டியிருக்கும்போது அந்த சங்கதியை நிரூபிக்கும் பொறுப்பு அவரையே சார்ந்தது என்பதால் மேற்படி மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) 4ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையை 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அந்த எதிருரையின் சுருக்கம்.**

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அபிடவிட்டில் கண்டுள்ள விபரங்கள் ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், மனுதாரரின் பாட்டியை 1ம் பிரதிவாதி ஏமாற்றி ஆவணம் பதிவு செய்ததாக சொல்லியிருப்பது ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், மனுதாரரின் பாட்டி பிரதிவாதி மீது நடவடிக்கை செய்வார் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லியிருப்பது பொய் என்றும், அதுகுறித்து 1ம் பிரதிவாதியும், இந்த எதிர்மனுதாரர்களும் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்குச் சொத்தினை 1ம் பிரதிவாதி விற்பனை செய்து விட்டதால் சொத்தில் வாதிக்கோ, மனுதாரர்களுக்கோ எவ்வித பாத்திய உரிமையும் கிடையாது என்றும், மனுதாரர்கள் வழக்கிற்கு தேவையற்ற கட்சிக்காரர்கள் என்பதால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

7) மனுதாரர் தரப்பில் 1ம் வாதி பூமயில் என்பவர் கடந்த 09.07.2024ம் தேதி காலமாகி விட்டதாகவும், அவரது கணவர் வேலுச்சாமி என்பவர் கடந்த 19.04.2024ம் தேதி காலமாகிவிட்டதாகவும், மேற்படியாருக்கு இந்த மனுதாரரின் தந்தையான முத்துவேல் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் வாரிசாக இருந்து வந்த நிலையில் மேற்படி முத்துவேல் கடந்த 03.07.2023ம் தேதி இறந்து விட்டதால் மேற்படியாரின் வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கின் சங்கதிகள் குறித்து இறந்துபோன பூமயிலை தவிர மற்ற தரப்பினரின் அறிவிற்கு எட்டாத பட்சத்தில் 2 முதல் 5 மனுதாரர்கள் பூமயிலின் வாரிசு நிலையில் வழக்கினை நடத்துவதற்கு ஏதுவாக கேட்பது சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றும், மேலும் வழக்குச் சொத்தினை 1ம் பிரதிவாதி விற்பனை செய்து விட்டதால் மேற்படி சொத்தில் வாதிக்கோ, இந்த மனுதாரருக்கோ எவ்வித பாத்திய உரிமையும் கிடையாது என்றும், மனுதாரர்கள் அவசிய கட்சிக்காரர்கள் என ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

அசல் வழக்கானது கடந்த 19.04.2021ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில், வழக்கின் 1ம் வாதி கடந்த 09.07.2024ம் தேதி காலமாகி விட்டதால் அவரது வாரிசான

முத்துவேல் கடந்த 03.07.2023ம் தேதி இறந்து விட்டதாக இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் அசல் வழக்கில் 1ம் வாதியின் வாரிசாக மனுதாரர்களை சேர்த்து வழக்கினை மேல்நடத்தினால்தான் வழக்கினை முழுமையாக தீர்மானிக்க முடியும் என்பதால், நீதியின் நலனை கருத்தில் கொண்டு மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

**மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 21.06.2025 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.06.21 19:52:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>: இல்லை

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>: இல்லை

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.06.21 19:52:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.02/2024
**in**
O.S.No.29/2021

Date: 21.06.2025
IA order